சிங்கம் காட்டுப்பாதை வழியாக வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. அந்த நேரம் சிங்கத்தின் எதிரே ஒரு குரங்கு வந்தது.


**“சிங்கராஜா! இவ்வளவு அவசரமாக எங்கே ஓடுகின்றீர்கள்? உங்கள் கால்கள் வலிக்காதா?”** என்று அன்போடு கேட்டது குரங்கு.
அதனைக் கேட்ட சிங்கம் **“குரங்கே! நான் வேட்டையாட வேண்டி ஒரு மானைத் துரத்திச் செல்கிறேன். அந்த மான் இந்தப் பாதையின் வழியாகத்தான் ஓடிவந்ததை கவனித்தேன்.
அதனை நீ பார்த்தாயா?”** என்று கேட்டது. அதற்குக் குரங்கு **“சிங்கராஜா! அந்த மான் இந்தப் பக்கம் வரவில்லை என்று நினைக்கிறேன். அப்படி வந்தால் உங்களுக்கு முன்னர் நான் அந்த மானை சந்தித்திருப்பேன்”** என்று கூறியது.
உடனே சிங்கம், குரங்கிடம் வேறு எதுவும் பேச விரும்பாமல் தான் வந்த வழியாகத் திரும்பி ஓட முயற்சித்தது.

TamilBo




அதனைக் கண்ட குரங்கு "**சிங்கராஜா! நான் சொல்கிறேன் என்று கோபப்படாதீர்கள். நீங்கள் அந்த மானைப் பிடித்து என்ன செய்யப் போகின்றீர்கள்? அதனை மட்டும் என்னிடம் தயவு செய்து தெரியப்படுத்துங்களேன்**" என்று கூறியது .
அதனைக் கேட்ட சிங்கம் ஹ் ஹா... ஹா... என்று காடே அதிரும்படியாக சிரித்தது . பின்னர் குரங்கைப் பார்த்து "**குரங்கே! இது கூடவா தெரியாமல் இருக்கின்றாய்? நான் அந்த மானைப் பிடித்து அடித்துக் கொன்று சாப்பிடப் போகின்றேன்! மானின் சுவையான கறியைப் பற்றி உனக் கென்ன தெரியும்!**" என்று குரங்கைப் பார்த்து கேலி செய்தது.
உடனே குரங்கு "**சிங்கராஜா இந்தக் காட்டில் நீங்கள்தான் எல்லா மிருகங்களையும் வேட்டையாடி உண்டு வருகின்றீர்கள். ஆனால் உங்களை வேட்டையாடி உண்ணும் படியாக கடவுள் வேறு எந்த விலங்கையும் படைக்கவில்லை.**
**அதனால், பாவத்திற்கு அஞ்சாமல் எல்லா மிருகங்களையும் கொன்று தின்று வருகின்றீர்கள்.**

**ஆனால் உங்களையும் வேட்டையாடக் கூடியவர்கள் மனிதர்கள்தான்.**
**ஆனால் அந்த மனிதரில் ஒருவரே தனது ஆசைகளை எல்லாம் வெறுத்து இந்தக் காட்டில் முனிவர் கோலத்தில் தவமிருக்கின்றார்.**
**அந்த மனிதரே, மிருங்கங்களைக் கொன்று பாவம் செய்யாமல் துறவியாக வாழ்கின்ற போது , நீங்கள் மட்டும் உங்களோடு போராட முடியாத காட்டு மிருகங்களை கொல்கின்றீர்களே? இது தர்ம் ஆகுமா?"** என்று கனிவோடு கேட்டது.
குரங்கின் வார்த்தைகள் எல்லாம் சிங்கத்தின் காதுகளில் ஈட்டி போல் பாய்ந்தன.




உடனே குரங்கை ஏறிட்ட சிங்கம் "**குரங்கே நீ சொல்வது நிஜமா? இந்தக் காட்டில் மனிதர் எவரேனும்**

**தவக்கோலத்தில் வாழ்கின்றாரா**” என்று ஆச்சர்யமாகக் கேட்டது.
அதனைக்கேட்டு திடுக்கிட்ட குரங்கு “**சிங்க ராஜா எதற்காக அப்படிக் கேட்கின்றீர்? அந்த மனிதனையும் பிடித்து இரையாக்கப் போகின்றீர்களா?**” என்று வியப்போடு கேட்டது.
உடனே சிங்கம் “**குரங்கே நீ என்னைத் தவறாக எண்ண வேண்டாம். அந்த மனிதனுக்கு நான் ஏதாவது சேவை செய்து, புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்.**
**நீ கூறிய வார்த்தைகள் எல்லாம் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. இனிமேல் நான் பாவம் செய்யாமல் வாழ்வதாக முடிவு செய்து விட்டேன். மாமிசத்தை உண்டு உண்டு மதிகெட்டு அலைந்த எனக்கு உன் அறிவுரைகள் நான் திருந்துவதற்கு வழி செய்துவிட்டது.**
**இனி நான் அந்த மானைத் தேடிப்போக மாட்டேன். இன்று முதல் எந்த உயிரினத்தையும் வேட்டையாடாமல் அசைவம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, தாவரங்களை உண்டு வாழ்வதாக முடிவு செய்துவிட்டேன்.**
**இப்போதே நீ கூறிய அந்த முனிவரிடம் என்னை அழைத்துச் செல்**” என்று கூறியது சிங்கம். குரங்கு மகிழ்ச்சியுடன் சிங்கத்தை நோக்கியது.
**“சிங்கராஜாவே! நல்லவரைப் பற்றி உன்னிடம் பேசியதால் உன் மனமும் நல்லதாகவே மாறி விட்டது**” என்று கூறியது.